## அத்தனகல்ல பிரதேச சபை

## கம்பஹா மாவட்டம்

### 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 20 ஆந் திகதியும் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 26 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2013 ஆகஸ்ட் 26 ஆம் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள அத்தனகல்ல பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் போது நன்கொடையாகக் கிடைக்கப்பெற்றிருந்த ஓர் உழவு இயந்திரத்தின் பெறுமதியான ரூபா 1,379,000 தொகையும் தளபாட உபகரணங்களின் பெறுமதியான ரூபா 108,570 தொகையும் பெறுமதி மதிப்பிடப்பட்டிராத கொங்கிரீட் கலவை இயந்திரம், ஸ்கானர் இயந்திரம், போட்டோ பிரதி இயந்திரம், அச்சீட்டு இயந்திரம் மற்றும் கணனி இயந்திரத்தினதும் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மகநெகும மற்றும் கமநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த 14 செயற்திட்டங்களுக்காகப் பெறவேண்டிய ரூபா 7,252,250 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

**தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 167,698,235 கூட்டுத்தொகையான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

**1.3.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

05 கணக்கு விடயங்களிற்குரிய கணக்குகளின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 490,218,919 ஆக இருந்ததுடன், அவற்றிற்கு உரித்தான துணைப் பதிவேடுகள்/ அறிக்கைகளின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 482,088,444 ஆனமையால் ரூபா 8,130,475 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 29,872,781 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,824,665 ஆக இருந்தது.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2001 ஆம் 2003 ஆம் ஆண்டுகளின் போது வங்கியில் வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 40,599 தொகை தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 47,850 கூட்டுத்தொகையான தேறாத 2 காசோலைகள் தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 வருமான நிர்வாகம்**

**2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டிற்கு உரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டவை | உள்ளபடியானவை | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 12,856 | 12,736 | 27,642 |
| (ii) | வாடகை | 4,632 | 4,770 | 298 |
| (iii) | ஏனைய வருமானம் | 5,409 | 6,064 | 12,748 |

**2.3.2 நிலுவையான வீத வரி**

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாகக் காணப்பட்ட வீதவரி மீதி ரூபா 27,413,521 தொகையானதுடன் கடந்த ஆண்டுகளின் போது அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 19,415,462 ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது ஒரு வருடத்திற்கு மேலான காலமாக நிலுவையாகக் காணப்பட்ட வீதவரி அறவீட்டின் சதவீதம் 29% ஆகக் காணப்பட்டது.

(ஆ) எகொடபொத்த உப அலுவலக அதிகாரப்பகுதியில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் நிலுவையாகக் காணப்பட்ட வீதவரி மீதி ரூபா 1,534,610 தொகையானதுடன் அறவிடப்படுவதற்கு ஆக்கபூர்வமான நடைமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கடை வாடகை**

4 அரசாங்க நிறுவகங்களிலிருந்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாது நிலவிய கடை வாடகை நிலுவை மீதி ரூபா 3,138,260 ஆகக் காணப்பட்டது.

**2.3 ஒப்பந்த நிர்வாகம்**

2011 ஆம் ஆண்டின் மகநெகுமவின் கீழ் ரூபா 1,500,000 தொகையான ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்த 3 செயற்திட்டங்களின் செயற்பாடுகள் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாதிருந்ததுடன் கமநெகுமவின் கீழ் மீளாய்வாண்டின் போது ரூபா 7,092,126 இற்கு மதிப்பிடப்பட்டிருந்த 7 செயற்திட்டங்களினது வேலையும் கணக்காய்வுத் தினம் வரை பூர்த்திசெய்யப்படாதிருந்தன.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) வருமான நிர்வாகம்

(ஈ) சொத்து முகாமைத்துவம்